*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை - 4*
*01 01 2026 THURSDAY 7 15 AM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. ஆங்கிலப் புத்தாண்டு, சமூகத்தில் அமைதியையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாட்டு சிறப்பு திட்டத்தை குடியரசுத்தவைலர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

3. நாட்டில் ஐந்து மாநிலங்களில் நடைபெற்று வரும் பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களின் பணிகள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

4. தொலைக்காட்சி, சமையல் எரிவாயு அடுப்புகள் மற்றும் குளிர்சாதன பெட்டிகளுக்கான எரிசக்தி சேமிப்பு குறித்த நட்சத்திர குறியீட்டை வழங்குவது இன்று முதல் கட்டாயமாக்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. தில்லி, ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களில் இன்று மிக அதிக அளவில் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

2026 ஆங்கிலப் புத்தாண்டை ஒட்டி, தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், புதிய ஆண்டு அனைவரது முயற்சிகளையும் வெற்றியடையச் செய்யட்டும் என்று கூறியுள்ளார்.

நல்ல உடல் ஆரோக்கியமும் வளமும் பெற தாம் வாழ்த்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், வளமான, வலிமையான இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதியேற்போம் என்று தெரிவித்துள்ளார்.

வளர்ச்சி, சமூக நல்லிணக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு தொடர்ந்து பணியாற்ற பாடுபட வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த புத்தாண்டு விடியல் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையையும், புதிய வாய்ப்புகளையும், வலுவான உறுதியையும் உருவாக்கி, வாழ்க்கையை மகிழ்ச்சி, நல்ல ஆரோக்கியம் மற்றும் செழிப்புடன் உருவாக்கட்டும் என்று கூறியுள்ளார்.

ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் நிலைநிறுத்துவதற்கும், நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்து முன்னேறவும், நமது கூட்டுறுதியை மீண்டும் உறுதிப்படுத்துவோம் என்று ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும். புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026ஆம்ஆண்டு அமைந்திட வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், கடந்த ஆண்டில் மக்கள் நலனை அடிப்படையாக கொண்டு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று இந்த ஆண்டிலும் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடரும் என்று கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பயணத்தில் புத்தாண்டு முக்கியப் பங்கு வகிக்கும் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஆங்கிலப் புத்தாண்டு உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

பசிபிக் தீவில் உள்ள Kripati-யில் முதன்முதலாக புத்தாண்டு தினம் வரவேற்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நியூஸிலாந்தின் ஆக்லாந்திலும், பின்னர் ஆஸ்திரேலியாவிலும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் தொடங்கியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாட்டு சிறப்பு திட்டத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்

குடியரசு தலைவர் மாளிகையின் கலாச்சார மையத்தில் இன்று காலை 11 மணிக்கு இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் நல அமைச்சகம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

திறன் தேசிய சவால் என்ற விழிப்புணர்வு இயக்கத்தை குடியரசு தலைவர் தொடங்கி வைப்பதோடு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கற்றுக்கொண்ட மாணவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் ஒரு பகுதியாக, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கற்கத் தொடங்கியுள்ளவர்களுக்காக சிறப்பு அமர்வு நடைபெறவுள்ளது.

கூகுள் நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் உலகளாவிய பிரபல செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிபுணர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த எதிர்காலத்திற்கான இந்தியாவின் பணிக்குழுவை தயார் செய்யும் அரசின் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

நாட்டில் ஐந்து மாநிலங்களில் நடைபெற்று வரும் சாலை, ரயில்வே, மின்சாரம், நீர்வளம், நிலக்கரி உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களின் பணிகள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவர் விவாதித்தார்.

உரிய நேரத்தில் இப்பணிகளை நிறைவு செய்யுமாறும் அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே, இதுபோன்ற கூட்டத்தின் மூலம் கடந்த பத்தாண்டுகளில் 85 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

>>>>><<<<<

பெங்களூருவில் உள்ள இந்திய விளையாட்டு ஆணைய மையத்தில் 75 கோடி ரூபாய் மதிப்பிலான உயர் திறன் மையத்திற்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

அப்போது பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின்படி, நாட்டின் விளையாட்டு சூழலில் பெரும் மாற்றம் ஏற்பட்டு வருவதாக கூறினார்.

நாட்டின் முதன்மையான விளையாட்டு மையங்களில் ஒன்றாக, இந்த மையம் திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

இந்த புதிய உயர்தர மையம், 2036ஆம் ஆண்டு, ஒலிம்பிக் போட்டிகளை நடத்த விரும்பும் இந்தியாவின் நீண்டகால இலக்கிற்கு உறுதுணையாக இருக்கும் என்று திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>><<<<<

அயோத்தியில் ராம் லல்லாவின் பிராண பிரதிஷ்டையின் இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி பக்தர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த ஆண்டு விழா, நாட்டின் நம்பிக்கை, கலாச்சார பாரம்பரியம் ஆகியவற்றின் தெய்வீக கொண்டாட்டம் என்று கூறியுள்ளார்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள எண்ணற்ற பக்தர்களின் சார்பாக பகவான் ஸ்ரீராமரின் பாதங்களில் தமது மரியாதைக்குரிய வணக்கங்களை தெரிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீராமரின் உத்வேகம், ஒவ்வொரு குடிமகனின் மனதிலும் சேவை, அர்ப்பணிப்பு, இரக்க உணர்வை வலுப்படுத்தட்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இவை வளமான தன்னம்பிக்கை கொண்ட நாட்டை உருவாக்குவதற்கான வலுவான அடித்தளத்தை அமைப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

உங்கள் பணம் - உங்கள் உரிமை இயக்கத்தின் மூலம், உரிமை கோரப்படாமல் இருந்த 4 ஆயிரத்து 200 கோடி ரூபாய் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை இந்த இயக்கம், நாடுமுழுவதும் 748 மாவட்டங்களில் 10 கட்டங்களாக நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது.

இந்த சேவையின் மூலம், இதுவரை கோரப்படாமல் இருந்த வங்கி வைப்புத் தொகைகள், காப்பீட்டு தொகைகள், பரஸ்பர நிதி மற்றும் பங்குகள் நிதி ஆகியவை உரியவர்களிடம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இந்த இயக்கம் வெற்றிகரமாக நிறைவடைந்ததாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தொலைக்காட்சி, சமையல் எரிவாயு அடுப்புகள் மற்றும் குளிர்சாதன பெட்டிகளுக்கான எரிசக்தி சேமிப்பு குறித்த நட்சத்திர குறியீட்டை வழங்குவது இன்று முதல் கட்டாயமாக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பாக, தாமாக முன்வந்து இந்த குறியீடு வெளியிடப்பட்ட நிலையில், தற்போது இது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

>>>>><<<<<

விமானப்படை துணைத்தளபதி ஏர்மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி, நேற்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

கடந்த 40 ஆண்டுகளாக விமானப் படையின் பல்வேறு பிரிவுகளில் அவர் பணியாற்றியுள்ளார்.

தமிழகத்தில், நீலகிரி மாவட்டம், வெலிங்டனில் உள்ள இந்திய விமானப்படையின் விமானிகளுக்கான பயிற்சி நிறுவனம் மற்றும் பாதுகாப்பு சேவைகள் பணியாளர் கல்லூரியில் பயிற்றுநராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

ஓய்வு பெற்ற ஏர்மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரிaன் சிறப்பான சேவையை அங்கீகரிக்கும் வகையில், பரம் விசிஷ்ட் சேவா, அதி விசிஷ்ட் சேவா, வாயு சேனா ஆகிய பதக்கங்களை மத்திய அரசு வழங்கி கௌரவித்துள்ளது.

>>>>><<<<<

தில்லி, ஹரியானா, சண்டிகர், கிழக்கு உத்தரபிரதேசம், ஒடிசா, பஞ்சாப், மேற்கு ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இன்று மிக அதிக அளவில் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்ராகண்ட் மாநிலம், உத்தர்காஸி, ருத்ரபிரயாக், சமோலி, பித்தோரகர் மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sonal Patil – Bela Tamhankar இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 6-3, 6-3 என்ற செட்கணக்கில் மற்றொரு இந்திய இணையான Akansha Dileep – Soha Sadiq இணையை வென்றது.

>>>>><<<<<

கென்யாவின் நைரோபியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஈஸ்வர மூர்த்தி ஆடவர் பிரிவிலும், வன்ஷிதா மகளிர் பிரிவிலும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<